# இந்தியக் கிறிஸ்துமஸ்

வாசிக்க: லூக்கா 2:8-18

***"கடவுள் இவ்வளவாய் உலகில் அன்புகூர்ந்தார்" (யோ 3:16)***

இந்தியாவில் கிறிஸ்துமஸ் இன்னும் மேற்கத்தியப் பாணியிலேயே கொண்டாடப்படுகிறது. ஆகவே கிறிஸ்தவரல்லாத நமது நண்பர்கள், கிறிஸ்தவத்தை இன்னும் வெள்ளைக்காரரின் மதம் என்றே கருதுகின்றனர். இவ்விழாக்களில் பங்கு கொள்ளவும் தயங்குகிறார்கள். மங்கோலியப்பாணியில் ஒரு விழா நடந்தால் நம்மில் எத்தனைபேர் அதில் கலந்துகொள்ளுவோம்? கிறிஸ்து கிழக்கிலோ, மேற்கிலோ அல்ல—மத்திய கிழக்கில் பிறந்தார்! இயேசுவின் பிறப்பை அறிவித்த தூதன் அது "எல்லா" மக்களுக்கும்—யூதரோ அல்லது குறிப்பிட்டதொரு மக்களினத்திற்கோ அல்ல— நற்செய்தி என்று பறைசாற்றினான் (லூக் 2:10).

இயேசுவின் பன்னிரு சீடரில் ஒருவராகிய தோமா முதல் நூற்றாண்டிலேயே நற்செய்தியோடு பாரதத்தில் நுழைந்தார். எனவே கிறிஸ்தவத்திற்கு இந்தியாவில் 2000 ஆண்டு சரித்திரம் உண்டு. இப்படியிருக்க இந்தியக் கிறிஸ்தவராகிய நாம் கிறிஸ்துவின் செய்தியை இன்னும் மேற்கத்தியக் கலாச்சாரத்திலேயே மக்களுக்குக் கொடுப்பது சரியல்ல. இந்தியப் பாணியில் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாட இதோ சில வழிமுறைகள்—

M கிறிஸ்துமஸை "கிறிஸ்து ஜெயந்தி" என அழைக்கலாம். கிறிஸ்தவரல்லாதோரையே முக்கிய விருந்தினராய் அழைக்கலாம்.

M நற்செய்தியை ஏற்கனவே தெரிந்த கிறிஸ்தவ இல்லங்களுக்கே பாடல் பவனி (Carols) செல்வானேன்? நம் சுற்று வட்டாரத்திலுள்ள கிறிஸ்தவரல்லாதோரின் இல்லங்களுக்குச் சென்று வாழ்த்து அட்டை அல்லது புதிய ஏற்பாடு ஒன்று அன்பளியுங்கள். நள்ளிரவில் அல்ல, மாலை நேரத்தில்!

M கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகளை எத்தனை புறமதத்தினருக்கு அனுப்ப முடியுமோ அனுப்பலாம் — இந்தியக் கலாச்சாரப் பின்னணியங்களில் வாழ்த்து அட்டைகளும், பிராந்திய மொழிகளில் வாழ்த்து வரிகளும் இருப்பது நல்லது.

M கிறிஸ்துமஸ் அலங்கரிப்புகளிலும் மாற்றம் கொண்டுவரலாம். சவுக்குக் கிளைகளைவிட மாவிலைத் தோரணம் இந்தியப் பாணிக்கேற்றது. மெழுகுவர்த்திக்குப் பதிலாக அகல்விளக்கு அல்லது குத்துவிளக்கு நல்லது. கிறிஸ்துவின் நற்செய்தி கலாச்சாரங்களுக்கு அப்பாற்பட்டது; கலாச்சாரத்திற்கு எதிரானதுமல்ல.

M கிறிஸ்துமஸ் போட்டிகளில் கிறிஸ்தவரல்லாத சிறுவர் சிறுமிகளைச் சேர்த்துக்கொள்ளலாம். பொருள் தெரியாத பதங்களை அகற்றி, தமிழில் இனிமையாகப் பாடலாமே!

M கிறிஸ்தவரல்லாதோருக்கான சிறப்பானதொரு கிறிஸ்துமஸ் ஆராதனையை சபைகளில், வீடுகளில், முடிந்தால் அலுவலகங்களிலும் நடத்தி அவர்களுக்குப் பரிசளிக்கலாம். நற்செய்தி கூற இது நல்ல வாய்ப்பு (2 தீமோ 4:2).



*சுவிசேஷத்தின் மேலிருந்த*
*யூத ஆடையைப் பவுல் கழற்றியெறிந்தார்;*
*இலத்தீன் ஆடையை லூத்தர் கழற்றியெறிந்தார்;*
*ஐரோப்பிய ஆடையை இந்தியாவிற்காகக்*
*கழற்றி எறியவேண்டியது நமது பொறுப்பு!*